ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஐங்குறுநூற்றில் நிலையாமை

**பேரா.ஜெ.தமிமுல் அன்சாரி**

**தமிழாய்வுத்துறை, புதுக்கல்லூரி, சென்னை – 600014.**

43

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியம் காதலையும்இ வீரத்தையும் தன் இரு கண்களாகக் கொண்டுஇ மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அரிய கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. அவ்வகையில் சங்க நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு அக நூலாக விளங்குகிறது. அகக் கருத்துகளினூடே புறக் கருத்துக்களில் ஒன்றான நிலையாமைச் செய்திகளை காதலோடு இணைத்து மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் விதத்தில் குறிப்பிட்டுள்ளது. அவற்றை செல்வம் நிலையாமைஇ பொருள் நிலையாமை ஆட்சி நிலையாமை, இளமை நிலையாமை, அழகு நிலையாமை, இன்பம் நிலையாமை, உரிமை நிலையாமை, யாக்கை நிலையாமை, உயிர் நிலையாமை என்ற பகுப்பில் ஆய்வு மேற்கொள்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இவ் உலகில் நாம் துய்க்கும் அனைத்தும் நிலையற்றவையாக உள்ளன. நம் உடல், உயிர், பொருள் அனைத்துமே நிலையற்றவையாகவே இருக்கின்றன. இடையில் நமக்குக் கிட்டும் காதல், உறவுகள், அன்பு, பாசம் இவையும் நிலையற்றவனவாக இருந்தாலும் அவை அழியும் முன் அடைந்துகொள்ள இலக்கியம் நம்மை வற்புறுத்தியுள்ளன. இதனாலேயே நிலையாமைச் செய்திகளை இலக்கியங்கள் அதிகம் வற்புறுத்துகின்றன. இவ்வாறு ஐங்குறுநூறு குறிப்பிடும் நிலையாமைச் செய்திகளை ஆய்கிறது இக்கட்டுரை.

நிலையாமை என்பது நிலையற்றவை என்ற பொருள் படும் சொல்லாகும். இவ் உலகம் நிலையற்றது என்பதைக் குறிப்பிடும் தொல்காப்பியம்,

"பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே." (தொல் – 1024)

என்று குறிப்பிடும் முகமாக 'நில்லா' என்ற சொல்லின் மூலம் நிலையாமையைக் குறிப்பிட்டுள்ளது.

நிலையாமைக் குறித்து சித்தர் பாடல் ஒன்று குறிப்பிடுகையில்,

" நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒருதோண்டி – அதைக்
கூத்தாடி கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" (கடுவெளிச் சித்தர்)

என்று கூறி யாக்கை, உயிர் இவற்றின் நிலையாமையை எடுத்துரைப்பதாக உள்ளது.

**செல்வம் நிலையாமை**

மனிதன் செல்வத்தின் மீது கொண்ட ஆசை நாளடைவில் வளர்ந்துகொண்டே செல்லும் தன்மையுடையது. பொருள் ஈட்டும் எண்ணம் கொண்டு தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவனுக்கு

செல்வ நிலையாமையை உணத்தியும், செல்வத்திற்காக துணையைப் பிரிந்து செல்லும் நிலையில், தலைவியின் இளமை அழகையும் துய்க்க முடியாமல் போகும் நிலையால் இளமையும் பாழ்படுகிறது. இதை,

"வெல்போர்க் குருசில் நீ வியன்சுரன் இறப்பின்
பல்கால் அல்குல் அவ்வரி வாடக்
குழலினும் இனைகுவள் பெரிதே
விழவொலி கூந்தல் மா அயோளே" (ஐங்.306)

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.

பணம் சம்பாதிப்பதற்காக இளம் வயது மனைவியைப் பிரிந்து பெரும்பாலான ஆடவர் வருடக்கணக்கில் அயல்நாடு செல்கின்றனர். அவர்கள் சேர்க்கும் செல்வமும் நிலையற்றது. அவர்களது இளமையும் நிலையில்லாதது எல்லாம் ஒரு நாள் அழிந்து போகும் என்பதை உணராமல். இத்தகைய நிலையால் இளம் தம்பதியினரது இளமை வாழ்க்கைப் பாழாகிறதை தற்காலத்திலும் காண முடிகின்றது.

பொருள் நிலையாமை

தலைவி முதல் குழந்தையை வயிற்றில் சுமந்தவளாக இருக்கிறாள். குழந்தையைப் பெற்று, தாய் உயிருடன் மீள்வது என்பது மறுபிறப்பாகவே உள்ளது. அதிலும் முதல் குழந்தையை ஒரு தாய் பெற்றெடுக்கின்றாள் என்றால் குழந்தைப் பேறு முடியும் வரை, உறவினர்களுக்கு ஒருவித பயம் அளிப்பதாகவே இருக்கும். இத்தகைய நேரத்தில் தலைவன் தலைவியை தனியே விடுத்து பொருளுக்காக பிரிவு மேற்கொள்ள விழைகிறான். இவன் செல்லும் பாலை வழி உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் உள்ளது. இவனது பிரிவை தலைவி தாங்க மாட்டாள். தலைவிக்கு ஏதேனும் நடந்துவிட்டால் இவன் தேடச் செல்லும் பொருளை விட பேரிழப்புக்கு ஆளாவான். அது மட்டுமின்றி பிறக்கும் குழந்தையின் புன் முறுவலை காண முடியாமல் அந்தஇன்பத்தை இழப்பவன் ஆவான். ஆகையால் இவன் தேடச் செல்லும் பொருள் எவ்விதத்திலும் உயர்ந்தது இல்லை ஏனென்றால் பொருள் நிலைபேறுடையது அல்ல. அப் பொருளுக்காக குடும்ப மகிழ்வை இழத்தல் கூடாது என்னும் விதத்தில்

"வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவு அயர்ந்தனையால் நீயே; நன்றும்" (ஐங் – 309)

என்னும் தோழிக் கூற்று அமைகின்றது. இதில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இன்பம் நிலையாமை, உயிர் நிலையாமை ஆகிய நிலையாமைகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

ஆட்சி நிலையாமை

போரினால் நாட்டு வளங்கள் அழிவதும், அரசுரிமைப் பறிபோவதும் உண்டு என்பதை,

"பெருந் தோள் மடவரல் காண்குவெம் தில்ல
நீள் மதில் அரணம் பாய்ந்தெனத் தொடி பிளந்து" (ஐங் – 444)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

**இளமை நிலையாமை**

இளமை நிலையாமைக்குள் அழகு நிலையாமை, இன்பம் நிலையாமை, உரிமை நிலையாமை போன்ற கூறுகளும் உள்ளடங்கி இருப்பதைக் காணலாம்.

காட்டு வழியாகச் செல்ல இருப்பதால் தலைவன் தலைவியுடனான உடன் போக்கினை மறுத்து தனியாகச் செல்வேன் எனக் கூற, தோழி அதனை மறுத்துக் கூறியப் பாடலில் இளமை நிலையில்லாதது என்ற செய்தியை அறிய முடிகின்றது.

"சுடர்த்தொடிக் குறுமகள் இனைய,

எனைப்பயம் செய்யுமோ – விடலை! நின் செலவே" (ஐங் – 305)

இப்பாடலில், இளமைப் பொருந்திய இவள், உன் பிரிவினை ஆற்றாது அழுது புலம்பும்படி நீ பிரிந்து செல்வதால் என்ன பயன் நேரப் போகின்றது. ஒரு பயனும் தராது என்று தோழி கூறுகிறாள். இதில் தலைவி குறுமகளாக உள்ள காலம் சிறிதே என்பதன் மூலம் இளமைக் காலம் நிலையற்றது என்பதை உணரமுடிகின்றது.

**அழகு நிலையாமை**

பொன்னாலான பசுமை நிறப் பாண்டிலும் பல காசுகளுமிருக்கும் அணிகலன்களை அல்குலில் அணிந்தவள் தலைவி. தோளில் ஒளி வீசும் அணிகலன் பூண்டவள். இந்த அணிகலன்கள் நழுவும்படி இவளை ஏங்கவைத்துவிட்டு நீ பொருள் தேடப் பிரிந்து செல்வாய் ஆயின் வீரக் காளையே இவள் முகத்தின் அழகை நீ பார்க்க முடியாது. என்னும் விதத்தில்,

" பொலம் பசும் பாண்டில் காசு நிரை அல்குல்

இலங்குவளை மென் தோள்இ இழை நிலை நெகிழப்" (ஐங் – 310)

என்ற தோழிக் கூற்று அமைந்துள்ளது.

**இன்பம் நிலையாமை**

தலைவன் அருகில் இருந்த காலத்தில் எவ்வித மனத் துன்பமும் இன்றி உறங்கிய கண்கள்இ இன்று அவன் இல்லாததால்இ கண்கள் உறக்கம் கொள்ளாமல்இ இன்பத்தை இழந்தவளாக தலைவியின் நிலை உள்ளது. அவன் தன்னுடன் இல்லாமையால்இ அவளின் அழகும் நாளுக்கு நாள் குறைந்துஇ மேனியும் வாட்டமுற்று இன்பத்தை முழுமையாக இழந்தவள் ஆனாள். இதைஇ

"பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்

பூசல் கேளார் சேயர் என்ப

இழை நெகிழ் செல்லல் உறீ

கழை முதிர் சோலைக் காடு இறந்தோரே" (ஐங் - 315)

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது.

**உரிமை நிலையாமை**

தலைவன் தலைவி உறவுநிலைகளில் காணப்படுகின்ற உரிமையும் நிலையில்லை. தலைவன் தலைவியை விடுத்து பரத்தை உறவு மேற்கொள்கின்றான். தலைவிஇ தலைவனின் மார்பு விரும்பி புணர்ச்சி கிட்டாது வருந்துகிறாள். இதைக் குறிப்பால் அறிந்த தோழிஇ தலைவனின் கொடுமையை எண்ணி அவனை வெறுத்தலை விடுத்து அவன் மார்பை விரும்புவது ஏன் என கேட்பதிலிருந்து தலைவியின் உரிமை பறிபோனது புலனாகின்றது. இக்கருத்தைஇ

"கொடிப்பூ வேழம் தீண்டிஇ அயல

வடிக் கொள் மாஅத்து வண் தளிர் நுடங்கும்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அணித் துறை ஊரன் மார்பே
பனித் துயில் கொள்ளும் இன்சா யற்றே" (ஐங் – 14)

இதே போன்றுஇ

நாளும் புதுப்புது பரத்தையர்களோடு இன்பம் அனுபவிக்கும் தலைவனை எண்ணி அறியாமை மிக்க தன் நெஞ்சம் நாளுக்கு நாள் மெலிகின்றது எனத் தலைவி கூறுவதிலிருந்து தலைவிக்கு மட்டுமே உரித்தானத் தலைவன் நெறி பிறழ்வதால்இ தலைவியின் உரிமை நிலையற்றுப் போனதை உணர முடிகின்றது. இதை.

"புதல் மிசை நுடங்கும் வேழ வெண் பூ
விசும்பாடு குருகில் தோன்றும் ஊரன்
புதுவோர் மேவலன் ஆகலின்
வறிது ஆகின்றது என் மடம் கெழு நெஞ்சே" (ஐங் – 17)

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.

**யாக்கை நிலையாமை**

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றான். இவன் சென்ற வழி மிகவும் கொடியது. பேய்களும்இ ஆறலைக் கள்வர்களும் தனக்கு விருப்பமானவர்களை கொன்று அழிப்பர். அத்தகைய வழியில் தன் தலைவன் சென்றுள்ளதை நினைத்து தலைவி வருந்துகிறாள். இதைஇ

" அவிர்தொடி கொட்பஇ கழுது புகவு அயரக்
கருங்கண் காக்கையொடு கழுகு விசும்பு அகவ" (ஐங் – 314)

என்ற தலைவி கூற்று தெளிவுறுத்துகிறது.

செல்வம்இ இளமைஇ யாக்கை என்ற முப்பெரும் நிலைகளில் இலக்கியங்கள் நிலையாமைச் செய்திகளை மக்களுக்கு உணர்த்தியுள்ளன. செல்வம் நிலையாமையை மனிதர்கள் உணர்வதால் செல்வம் மீதானப் பற்று குறைந்து ஈகை மீதானப் பற்று அதிகமாகிறது. செல்வத்திற்காக உறவுகளைப் பிரிந்து தன் இளமையையும்இ இளமைக்கால இன்பத்தையும்இ தான் மட்டும் இழத்தல் இன்றி தன்னைச் சார்ந்தவர்கள் இழப்பதையும் தடுக்க முடிகின்றது. உறவு மீதானப் பாசம் அதிகமாகிறது. யாக்கை நிலையாமையை உணர்கையில் இறப்பின் மீதான பயம் குறைந்து மறுமை மீதான நம்பிக்கையும்இ இறைவன் மீதான பயமும் ஏற்பட்டு முதுமை வரை காத்திருக்காது இளம் வயதிலேயே அறச் செயல்களை செய்ய மனம் தூண்டிவிடப்படுகின்றது.இதன் விளைவாக ஒழுக்கமானப் பண்பையும்இ மறுமையில் சுவனம் பெறும் தகுதியையும் இலக்கியங்கள் கூறும் நிலையாமைச் சிந்தனைகள் பெற்றுத் தருவது ஆய்வு முடிவாகும்.

**துணை நின்ற நூல்கள்**

தொல்காப்பியம், பொருளதிகாரம், தொகுதி – 1, தமிழன்னல் முதற் பதிப்பு - ஏப்ரல் 2010, மீனாட்சி புத்தக நிலையம் மதுரை – 625 001.

ஐங்குறுநூறு டாக்டர் நா. ராமையா பிள்ளை வர்த்தமானன் பதிப்பகம்.